செய்திக் குறிப்பு

காரைக்கால் மாவட்டம் பாலிடெக்னிக் கல்லூரியில் அரக்கோணத்தைச் சார்ந்த 04-வது பட்டாளியன் தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சார்ந்த சுமார் 10-க்கு மேற்பட்ட வீரர்கள் இன்று கல்லூரி மாணவர்களுக்கு பூகம்ப காலங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. சரியாக 4:00 மணிக்கு மணி ஓசை எழுப்பப் பட்டது. அனைத்து மாணவ, மாணவிகளும் தங்கள் உடைமைகளை தரையில் வைத்துக் கொண்டு அருகில் உள்ள ஹெலிபேட் மைதானத்துக்கு பாதுகாப்பாக ஓடினார்கள். மேலும் மீட்புப்படையைச் சார்ந்தவர்கள் மாடி அறைகளில் மீதம் உள்ள மாணவ மாணவிகளை அழைத்து வந்தார்கள். மீட்புப் படையைச் சார்ந்தவர்கள் சுமார் 36 வாரம் தங்கியிருந்து பல்வேறு பள்ளிகளிலும் மற்றும் பொது மக்களிடமும் செயல் விளக்கம் அளித்து வருகிறார்கள். இந்த பயிற்சியின் மூலம் மாணவர்கள் தங்களை பேரிடர் காலங்களில் தங்களை பாதுகாத்துக் கொள்ள உதவும் என்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள். உடன் சார்பு ஆட்சியர் திரு. A. விக்ராந்த் ராஜா. இ.ஆ.ப. மற்றும் கல்லூரி முதல்வர் திரு. சந்தானம் மற்றும். மாணவர்கள் கலந்து கொண்டனர்.

7/3/18